# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

## முன்னிலை :- திரு. S.ஜோதிகைலாஷ், B.A.,B.L.,(கூ.மு.பொ)

**2026ஆம்** ஆண்டு **ஜுலை** மாதம் **22 ஆம்** நாள் **புதன்கிழமை**

**கருங்கல் காவல் நிலையக் குற்ற எண்.140/2026**

இல்

குற்றவியல் பல் வகை மனு எண்**354/2026 (Crl.M.P)**

மோனிஷா (வயது 28/2026) .........மனுதாரர்/தடயபொருள் உரிமையாளர்
த/பெ.ரோயிசன் ஜெயபால்

// எதிர் //

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், .......... எதிர்மனுதாரர்
**கருங்கல்** காவல் நிலையம்
சட்ட பிரிவுகள் : **4(1)(C), 14(A) TNP Act**

இம்மனு **15.05.2026** தேதியில் பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா பிரிவு 497 மற்றும் 503ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று என் முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இவ்வழக்கில் மனுதாரர்/ தடயபொருள் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த **வழக்கறிஞர் திருமதி.M.லதா** அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை ஆராய்ந்தும், இன்று **22.07.2026** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரர் பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா பிரிவுகள் 497 மற்றும் 503ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில், கடந்த 26.04.2026 அன்று மனுதாரரின் தந்தை கருங்கல் சந்தை அருகில் மனுதாரருக்கு சொந்தமான TN 75 AQ 0362 என்ற எண் கொண்ட Honda Dio இருசக்கர வாகனத்தில் கருங்கல் சந்தை அருகில் நின்று கொண்டிருக்கும் போது கருங்கல் காவல் நிலையத்தால் மனுதாரரின் அப்பா 26 மதுபாட்டில்கள் வைத்திருந்ததாக பொய்யாக வழக்கு பதிவு செய்து மனுதாரரின் இருசக்கர வாகனத்தை கைப்பற்றியுள்ளார்கள் என்றும், மேற்படி வாகனம் தனது அன்றாட தேவைக்கு பயன்படுத்தி வந்ததாகவும், மழையிலும், வெயிலிரும் நின்றால் சேதமடைந்துவிடும் என்றும், தன்னிடம் ஒப்படைத்தால் மேற்படி வாகனத்தை உருமாற்றமோ, நிறமாற்றமோ, விற்பனையோ செய்யமாட்டேன் என்றும், நீதிமன்றம் கோரும் போது மேற்படி வாகனத்தை தவறாமல் ஆஜர்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

அரசுத்தரப்பு /எதிர்மனுதாரராகிய காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, பதில் பெறப்பட்டது. அவர்களது பதிலில் **தடயப் பொருளை** மனுதாரர்

வசம் ஒப்படைத்தால் **மேற்படி தடயப்பொருளை** விற்கக்கூடும் என்பதாலும், மனுதாரரின் தந்தை எந்தவித அனுமதியின்றி மதுபாட்டில்களை விற்பனை செய்ய இருசக்கர வாகனத்தை பயன்படுத்தியுள்ளார் என்பதால் அரசுடைமையாக்க காவல் கண்காணிப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கின் சொத்தை உருமாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளது என்றும், எனவே தடயபொருளை மனுதாரர் வசம் **தடயப்பொருளை** திரும்ப ஒப்படைப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்/

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையிலும், மனுதாரர் தான் வாகனத்தின் உரிமையாளார் என்று தெரிய வருவதாலும், எனவே மனுதாரரின் **தடயப்பொருளை** வைத்திருந்தால் எந்த பயனும் இல்லை என்பதாலும், அதை வைத்திருந்தால் எதிர்காலத்தில் அது பயனற்ற நிலைக்கு போய்விடும் என்றும், அதன் மறு மதிப்பு குறைந்து போய்விடும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் **மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம்(2002(10)SCC253)வழிக்காட்டுதலின்படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1) ன் படி** தடயப்பொருளை **இடைக்காலமாக ஒப்படைப்பதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.**

முடிவில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வழக்கு சொத்தானது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஆர்.பி.எண் 136/2026 ஆக நம்பராக்கப்பட்டுள்ளதால், மேற்படி தடயபொருளை மனுதாரர் வசம் **இடைக்காலமாக** ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1) தலா ரூபாய். 50,000/−த்திற்கான இருநபர் ஜாமீன்தார்களை முன்னிறுத்தி பிணைமுறி எழுதிதரவேண்டும்.

**2)** ரூபாய். 50,000/−த்திற்கான சொந்த பிணைமுறி எழுதிதரவேண்டும்.

3) மனுதாரர் மேற்படி தடயப்பொருளை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, வேறு எந்த வகையிலோ அதன் தன்மையினை, தோற்றத்தினை மாற்றம் செய்யக்கூடாது.

4) மனுதாரர் மேற்படி தடயபொருளை இது போன்ற எந்தவொரு குற்ற செயல்களிலும், ஈடுபடுத்த கூடாது. அவ்வாறு ஈடுபடுத்த மாட்டேன் என்று பிரமாணபத்திரம் மூலமாக தாக்கல் செய்ய வேண்டும்.

5) மனுதாரர் மேற்படி தடயபொருளை இந்நீதிமன்றமோ, அல்லது விசாரணை நீதிமன்றமோ கேட்கும் போது, உடனடியாக எந்தவித காரணமும் சொல்லாமல் ஒப்படைப்பேன் என்றும் **மேற்படி தடயபொருளை அரசுக்கு ஆதாயப்படுத்தும் நடவடிக்கைக்காக கேட்கும் போது உடன் எந்தவித காரணமும் சொல்லாமல் இந்நீதிமன்றத்திலோ, அல்லது விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்றம் உத்தரவிடும் அதிகார வரம்பிடமோ ஒப்படைப்பேன் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.**

6) மனுதாரர் புலன்விசாரணைக்கும், வழக்கு விசாரணைக்கும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்,

7) மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு மேற்படி தடயபொருளானது அரசுக்கு ஆதாயம் செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

8) மனுதாரர் தடயப்பொருளுக்கான **அசல் பதிவுச்சான்றிதழை** இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு **(22.07.2026)**ம் தேதி அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.07.22 19:04:50 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்(கூ.மு.பொ.)

Judicial Magistrate Court,
Eraniel

Court Seal

"The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date."